***உங்கள் சிந்தனைக்கும் தியானத்திற்கும்….*** மதமும் கடவுளும் (1)

எல்லா நதிகளும் சமுத்திரத்திலே ஓடி விழுந்தும் சமுத்திரம் நிரம்பாது; தாங்கள் உற்பத்தியான இடத்திற்கே நதிகள் **மறுபடியும் திரும்பும்**. (பிரசங்கி 1:7)

*ஆண்டவருடைய வார்த்தை இப்படி சொல்ல, உலகத்து மனிதர்களின் வார்த்தைகளை கவனியுங்கள்:*
”எல்லா மதங்களும் நல்லதைத்தான் போதிக்கின்றன. எல்லா நதிகளும் கடலில்தான் போய்ச் சேர்கின்றன. ஒரு ஊருக்குப் பல வழிகள் உள்ளன. எந்த வழியில் வேண்டுமானாலும் போகலாம்…" என்ற வார்த்தைகளை பலர் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன்……….

உலகைப்படைத்த கடவுள் சகலமும் பரிபூரணமாக வாசம் செய்யும் பரிசுத்த தெய்வம். அவரே நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்பருமாக இருக்கிறார்.
இந்த உலகில் கடவுள் பிரியப்படி வாழ்ந்து, பாவத்தைப் போக்கி புண்ணியத்தைச் சேர்த்து, **முடிவில்** இறைவனோடு நித்திய உலகில் வாழ, நம்முடைய அருமை முன்னோர்களுக்கு, கடவுள் உணர்த்தியதை அவரவர்கள் அறிந்த அளவிலே, பல வழிகளிலே நமக்குத் தெரிவித்திருக்கலாம். அவைகள் நாளடைவில் அடுத்து அடுத்து வருகிற தலைமுறைகள் அறிந்த விதத்திலே வழிமுறைகளிலே மாற்றமும் ஏற்பட்டிருக்கலாம். இவைகளிலே பல வித்தியாசங்களை நாம் பார்ப்பதற்கு காரணம் நம்மைப்போல மனிதர்கள் அனைவரும் குறைவுள்ள ஞானம் (பரிபூரணமில்லாத ஞானம்) உள்ளவர்கள் என்பதை தயவுசெய்து அமைதியுடன் சிந்தித்துப் பாருங்கள்.

சரியான வழியை அறிந்துகொள்ள, கடவுள் நமக்கு கொடுத்த வார்த்தைகளை, நாமே வாசித்து அறிந்து கொள்ள வாஞ்சித்தால், பல தலைமுறைகளாக வளர்ந்தும் மாறுபட்டும் வரும் மதத்திலுள்ள மனிதப் பிரமாணங்களை அகற்றி, கடவுளின் ஜீவனுள்ள பிரமாணங்களை மட்டும் தெளிவாக அறிந்து கொள்ள கடவுள் நமக்கு உதவி செய்வார். இதை சற்று தயவுசெய்து சிந்தித்துப் பாருங்கள்.

*இந்த கருத்தை, பல தலைமுறைகளின் பாரம்பரியத்திலே ஒன்றிவிட்ட,*
*நமது மனம் உடனே ஏற்றுக்கொள்ளாமல் இருக்கலாம்.*

வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. (2 தீமோத்தேயு 3:16-17)

*இந்த வசனத்தையும் நமது மனம் உடனே ஏற்றுக்கொள்ளாமல் இருக்கலாம்.*

வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே. (யோவான் 5:39)

*நீங்களே ஆராய்ந்து பார்த்து, சிந்தியுங்கள். **இந்த உண்மை நிச்சயம் விளங்கும்.***

கடவுளை வணங்கும் நாம், கடவுள் நமக்கு என்ன சொல்லியிருக்கிறார் என்பதை அறிந்து கொள்ளாமல் இருந்தால், கடவுளுக்கும் நமக்கும் உள்ள தொடர்பு எப்படி வளரும்?
சிந்தித்துப் பாருங்கள்.

**கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்.** (குறள் 2)

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு.** (குறள் 423)

எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள். (1 தெசலோனிக்கேயர் 5:21)

*ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக. அன்புடனும் ஜெபத்துடனும்,*
www.kalyanam.ca

---

***From Dictionary Reference:***

**Religion:** any system of faith and worship, சமயம், மதம்.
**Spiritual:** relating to the soul or the mind, ஆன்மீக, மனத் தத்துவ:
pure, பரிசுத்தமான: holy, புனிதமான, தெய்வரீதியான
**ஆன்மீகம்:** ஆன்மா தொடர்பானது.
**ஆன்மா**: உடலிலிருந்தும் மனத்திலிருந்தும் வேறானதாகக் கருதப்படும் பொருள்: Soul
**Soul:**
1. the principle of life, feeling, thought, and action in humans, regarded as a distinct entity separate from the body, and commonly held to be separable in existence from the body; the spiritual part of humans as distinct from the physical part.
2. the spiritual part of humans regarded in its moral aspect, or as believed to survive death and be subject to happiness or misery in a life to come: arguing the immortality of the soul.